**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure**
**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 221 of 2016**

**Deposition of Witness P.W.1**

| | |
|---|---|
| **Name : மகேஷ்** | **Father/Husband's Name : கோபாலகிருஷ்ணன்** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**A1, A2, A3, A4, A7 present. A5, A6, A8 absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது துணை வட்டாட்சியராக திண்டுக்கல் புவியியல் மற்றும் சுரங்கத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். கடந்த 20.09.2015ம் தேதி பழனி வருவாய் ஆய்வாளராக பணியில் இருந்தபோது 20.09.2015 முதல் 22.09.2015ம் தேதி வரை மூன்று தினங்கள் விநாயகர் சதுர்த்தி ஊர்வலத்திற்கு இந்து அமைப்புகள் அனுமதி கேட்டிருந்தார்கள். WPMD 16349/2015–ன் 16.09.2015ம் தேதி பிறப்பித்த உத்தரவில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளுடன் 17.09.2015ம் தேதி பழனி வருவாய் கோட்டாட்சியர் தலைமையில் இந்து அமைப்பினர்களை அழைத்து மேற்படி உயர்நீதிமன்ற உத்தரவின்படியான வழிமுறைகளை தெரிவித்து காலை 10.00 மணி முதல் சூர்ய அஸ்தமத்திற்குள் விநாயகர் ஊர்வலத்தை சண்முக நதியில் முடித்துவிட வேண்டும் எனவும், கரைத்துவிட வேண்டும் எனவும் தெரிவித்து கையொப்பம் பெறப்பட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நகல் வழங்கப்பட்டது. இந்து முன்னனி அமைப்பினர் பங்கேற்றனர். அதில் BJP, VHP ஆகிய அமைப்புகளில் உள்ள மாவட்ட செயலாளர் ஜெகன், செந்தில்குமார், இந்து முன்னனி அருண், VHP செந்தில்குமார், BJP கனகராஜ், தீனதயாளன் மற்றும் இந்து முன்னனி முன்னால் மாநில துணை தலைவர் திருமலைச்சாமி மற்றும் பலர் கலந்து கொண்டனர். மேற்படி கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனை ஏற்படாத வண்ணம் நடந்து கொள்ளுமாறு அறிவுரை வழங்கப்பட்டது. பின்னர் 20.09.2015ம் தேதி மாலை 4.00 மணிக்கு நானும்,

கிராம உதவியாளராக இருந்த மைக்கேல் ஆகியோர்கள் சேர்ந்து அடிவாரம் பாதவிநாயகர் கோவில் முன்பு கூடியிருந்தபோது மேற்படி இந்து அமைப்பினரிடம் மேற்படி ஊர்வலத்தை துவக்கி உரிய நேரத்தில் முடிக்குமாறு அறிவுறுத்தியும் அவர்கள் கலந்து செல்லுமாறு சொன்ன பிறகும் மேற்படி உத்தரவை மீறி என்னை பார்த்து உங்க வேலையை பாருங்க என பேசி, எனது வேலையை செய்யவிடாமல் மேற்படி ஊர்வலத்தை துவக்கவிடாமல் பழனி மலைக்கு செல்லும் பக்தர்களை தடுத்து கூட்டமாக கூடி பாதவிநாயகர் கோவில் முன்புறம் மேடை அமைத்து பொதுமக்களுக்கும், போக்குவரத்துக்கும் இடையூறாக வைத்திருந்திருந்தார்கள். அதற்கு பிறகு நான் அடிவாரம் காவல் நிலையம் வந்து எதிரிகள் மீது புகார் கொடுத்தேன். **புகார் மனு அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது.** எதிரிகள் உயர்நீதிமன்ற உத்தரவை மீறி நடந்து கொண்டதால் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தேன். ஆஜர் எதிரிகள் ஜெகன், செந்தில்குமார், அருண், தீனதயாளன் ஆவார்கள். மற்றொருவரின் பெயர் பாலன், செந்தில்குமார், கனகராஜ், திருமலைச்சாமி ஆகியோர்களை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 to 7 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

2. எதிரிகள் அனைவரும் நீண்டகாலமாக பழனியில் இருப்பவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் பல்வேறு இந்து அமைப்புகளில் பொறுப்புகளில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்ட சம்பவ காலத்திற்கு முன்பே எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். 17.09.2015ம் தேதி கூட்டம் நடந்ததற்கான ஆவணத்தை போலிஸில் கொடுத்தேனா என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை, கூட்டம் நடந்தது. இந்த வழக்கில் சொல்லியுள்ள சம்பவம் என்பது ஊர்வலம் தொடங்குவதற்கு முன்பு அந்த இடத்தை பார்த்ததாக சொல்லி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். விநாயகர் ஊர்வலத்திற்கு 15–30 நாட்களுக்கு முன்பு இடத்தை குறிப்பிட்டு அளவை குறிப்பிட்டு மேடை மற்றும் சிலை வைப்பதற்கு அனுமதி வாங்குவார்கள் என்றால் சரிதான், மற்ற இடங்களுக்கு வாங்குவார்கள், பாதவிநாயகர் கோவில் முன்பு மேடை அமைக்க அனுமதி வாங்கவில்லை. எல்லா வருடங்களும் சிலைகள் அனைத்தும் பாதவிநாயகர் கோவில் முன்பு கொண்டு வந்து அங்கிருந்து மைக் செட் மூலம் சிலைகள் கொண்டு செல்லப்படும் என்றால் சரிதான். எல்லா வருடங்களும் அவ்வாறு

கொண்டு செல்லும் நிலையில் இந்த வருடத்தில் மட்டும் மேடை அமைக்க அனுமதி வாங்கவில்லை என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேடை அமைத்ததற்கு Photo, Video எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மேடை அமைத்தார்கள். எதிரிகள் அவ்வாறு அனுமதியின்றி எந்த மேடையும் அமைக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் புகார் மனுவில் சொல்லியுள்ளதுபோல், முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எந்த எதிரி என்ன வார்த்தை குறிப்பிட்டு சொன்னார் என்று புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு மேடை அமைக்கப்பட்டது என்றோ, அது இடைஞ்சலாக இருந்தது என்றோ கோவிலுக்கு வரும் பக்தர்கள் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. காவல் துறையின் வேண்டுகோளுக்கிணங்க பொய் புகார் கொடுத்தேன் என்றாலும் அதற்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>8ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. எதிரி திருமலைச்சாமி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். புகார் மனுவில் 8வது எதிரி பெயர் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். மற்றும் பலர் என்று சொல்லியுள்ளதில் எத்தனை பேர் என்றால் ஞாபகமில்லை. விசாரணை வாக்குமூலத்தில் திருமலைச்சாமி என்று பெயர் சொல்லியுள்ள நிலையில் யார் சொல்லி சேர்த்தேன் என்றால் யாரும் சொல்லவில்லை அவர் மேடையில் இருந்தார். உண்மையில் அவர் மேடையில் இருந்திருந்தால் புகார் கொடுக்கும்போதே அவர் பெயரையும் சேர்த்து புகார் மனுவில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. 8ம் எதிரி என்ன வார்த்தை பேசினார் என்றால் மொத்தமாக எல்லோரும் பேசினார்கள். 8ம் எதிரி இந்து முன்னனி அமைப்பில் இல்லை என்றால் சரியல்ல, முன்னால் பொறுப்பில் இருந்தார். எதிரி திருமலைச்சாமி முன்னால் BJP பொறுப்பில் தான் இருந்தார் என்றாலும் இந்து முன்னனி பொறுப்பில் இல்லை என்றாலும் அது சரியாக தெரியவில்லை. கடந்த 40 வருடங்களாக இந்து அமைப்பினர் பழனியில் சம்பிரதாயப்படி, பாரம்பரியப்படி விநாயகர் ஊர்வலம் நடத்துகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு மேடை அமைத்தாக சொல்லியுள்ளதில் அந்த மேடையை அமைத்து கொடுத்த நபர் யார் என்றால் மேடை அமைத்திருந்தார்கள் அதை அமைத்து கொடுத்த நபர் யார் என்று தெரியவில்லை. அந்த மேடையை அமைத்து கொடுத்த தனி நபர்

**யாரென்று விசாரித்தேனா என்றால் இல்லை. அரசியல் உள்நோக்கத்தோடு உயர் அதிகாரிகள் தூண்டுதலோடு, காவல் துறையின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 18:08:47 +0530

**நீதித்துறை நடுவர்,**
**பழனி.**

**Previous Examination date –**

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of the Judicial Magistrate, Palani.**

**C.C. 221 of 2016**

**Deposition of Witness P.W.2**

| | |
|---|---|
| **Name : மைக்கேல்** | **Father/Husband's Name : சலேத்துமுத்து** |
| **Village :** | **Taluk :** |
| **Caste :** | **Calling :** |
| **Religion :** | **Age :** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 20.07.2026.**

**A1, A2, A3, A4, A7 present. A5, A6 absent. Petition filed and allowed.**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது பழனி நகர் கிராம நிர்வாக அலுவலரின் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 மகேஷ், பழனி வருவாய் ஆய்வாளராக வேலை பார்த்தார். அவரிடம் நான் வேலை பார்த்துள்ளேன். கடந்த 20.09.2015ம் தேதி இந்து அமைப்புகள் விநாயகர் ஊர்வலம் நடத்த அனுமதி கேட்டிருந்தார்கள். அப்போது வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் உயர்நீதிமன்ற ஆணைப்படி காலை 10.00 மணி முதல் சூர்ய அஸ்தமனத்திற்குள் மேற்படி ஊர்வலத்தை நடத்தி முடிக்குமாறு அவர்களிடம் அறிவுறுத்தி உத்தரவு பிறப்பித்தார்கள். பின்னர் 20.09.2015ம் தேதி மாலை 4.00 மணியளவில் நானும், வருவாய் ஆய்வாளர் மகேஷ்–ம், சார்பு ஆய்வாளர் ஞானசேகரன் அவர்களும் பாதவிநாயகர் கோவில் பழனி மலைக்கோவில் அருகே அலுவலில் இருந்தபோது இந்து அமைப்பினர் அனுமதியின்றி மலைக்கோவில் பாதவிநாயகர் கோவில் முன்பு பொதுமக்களும், பக்தர்களும் செல்ல முடியாதவாறு மேடை அமைத்து இடையூறு ஏற்படுத்தினார்கள். அதை கேட்டபோது எதிரிகள் மேடைப்பேச்சின்போது இந்து மக்கள் இந்து கடையில் பொருள் வாங்க வேண்டும் என சொல்லி கலவரத்தை தூண்டும்படி பேசினார்கள். அதற்கு பிறகு ஊர்வலத்தை நடத்த நேரமாகிவிட்டது என இந்து அமைப்பினரிடம் அறிவுறுத்தி ஊர்வலத்தை தொடங்குமாறு மகேஷ் அவர்கள் மற்றும் போலிசார் அவர்களிடம் சொன்னபோது, அப்போது இந்து அமைப்பினர்கள் எப்போது ஊர்வலத்தை நடத்த வேண்டுமென எங்களுக்கு தெரியும், உங்கள் வேலையை நீங்க பாருங்க என எங்களை பார்த்து

அவர்கள் கூறினார்கள். பின்னர் மேற்படி இந்து அமைப்பினர் உரிய நேரத்தில் ஊர்வலத்தை நடத்தாமல் மாலை 5.00 மணிக்கு ஊர்வலத்தை ஆரம்பித்து இரவு 8.00 மணியளவில் சண்முகநதியில் இருந்து 10.00 மணி வரை உயர்நீதிமன்ற ஆணையை மீறி கரைத்து கொண்டிருந்தார்கள். மேற்படி புகார் சம்மந்தமாக வருவாய் ஆய்வாளர் பணி செய்யவிடாமல் தடுத்த நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க அடிவாரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். ஆஜர் எதிரிகள் இந்து முன்னனி மாவட்ட செயலாளர் ஜெகன், அதே அமைப்பை சேர்ந்த அடிவாரம் பாலன், VHBஐ சேர்ந்த செந்தில்குமார், இந்து முன்னனி அருண், BJP தீனதயாளன் ஆஜர் எதிரிகள் ஆவார்கள். செந்தில்குமார், கனகராஜ், திருமலைச்சாமி ஆகியோர்களை எனக்கு தெரியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**1 to 7 எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**</u>

2. எதிரிகள் அனைவரும் நீண்டகாலமாக பழனியில் இருப்பவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் அனைவரும் பல்வேறு இந்து அமைப்புகளில் பொறுப்புகளில் இருக்கிறார்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் சொல்லப்பட்ட சம்பவ காலத்திற்கு முன்பே எதிரிகளை எனக்கு தெரியும் என்றால் சரிதான். 17.09.2015ம் தேதி கூட்டம் நடந்ததற்கான ஆவணத்தை போலிஸில் கொடுத்தேனா என்றாலும், இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றாலும் இல்லை, கூட்டம் நடந்தது. இந்த வழக்கில் சொல்லியுள்ள சம்பவம் என்பது ஊர்வலம் தொடங்குவதற்கு முன்பு அந்த இடத்தை பார்த்ததாக சொல்லி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். விநாயகர் ஊர்வலத்திற்கு 15–30 நாட்களுக்கு முன்பு இடத்தை குறிப்பிட்டு அளவை குறிப்பிட்டு மேடை மற்றும் சிலை வைப்பதற்கு அனுமதி வாங்குவார்கள் என்றால் சரிதான், மற்ற இடங்களுக்கு வாங்குவார்கள், பாதவிநாயகர் கோவில் முன்பு மேடை அமைக்க அனுமதி வாங்கவில்லை. எல்லா வருடங்களும் சிலைகள் அனைத்தும் பாதவிநாயகர் கோவில் முன்பு கொண்டு வந்து அங்கிருந்து மைக் செட் மூலம் சிலைகள் கொண்டு செல்லப்படும் என்றால் சரிதான். எல்லா வருடங்களும் அவ்வாறு கொண்டு செல்லும் நிலையில் இந்த வருடத்தில் மட்டும் மேடை அமைக்க அனுமதி வாங்கவில்லை என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. மேடை அமைத்ததற்கு Photo, Video எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மேடை அமைத்தார்கள். எதிரிகள் அவ்வாறு அனுமதியின்றி எந்த மேடையும் அமைக்கவில்லை என்றாலும், நான் பொய்யாக

சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் புகார் மனுவில் சொல்லியுள்ளதுபோல், முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எந்த எதிரி என்ன வார்த்தை குறிப்பிட்டு சொன்னார் என்று புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு மேடை அமைக்கப்பட்டது என்றோ, அது இடைஞ்சலாக இருந்தது என்றோ கோவிலுக்கு வரும் பக்தர்கள் யாரும் புகார் கொடுத்தார்களா என்றால் இல்லை. காவல் துறையின் வேண்டுகோளுக்கிணங்க பொய் புகார் கொடுத்தேன் என்றாலும் அதற்கு ஆதரவாக பொய்சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொன்னதுபோல் வார்த்தைகளை எதிரிகள் சொன்னார்கள் என்று பொதுமக்களோ, மாற்று மதத்தினரோ புகார் எதவும் என்னிடமோ, அ.சா.1யிடமோ, உயர் அதிகாரியிடமோ கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

<u>8ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

3. எதிரி திருமலைச்சாமி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மற்றும் பலர் என்று சொல்லியுள்ளதில் எத்தனை பேர் என்றால் ஞாபகமில்லை. விசாரணை வாக்குமூலத்தில் திருமலைச்சாமி என்று பெயர் சொல்லியுள்ள நிலையில் யார் சொல்லி சொன்னேன் என்றால் யாரும் சொல்லவில்லை அவர் மேடையில் இருந்தார். உண்மையில் அவர் மேடையில் இருந்திருந்தால் புகார் கொடுக்கும்போதே அவர் பெயரையும் சேர்த்து புகார் மனுவில் சொல்லியிருப்பார் என்பதால் நான் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. 8ம் எதிரி என்ன வார்த்தை பேசினார் என்றால் மொத்தமாக எல்லோரும் பேசினார்கள். 8ம் எதிரி இந்து முன்னனி அமைப்பில் இல்லை என்றால் சரியல்ல, முன்னால் பொறுப்பில் இருந்தார். எதிரி திருமலைச்சாமி முன்னால் BJP பொறுப்பில் தான் இருந்தார் என்றாலும் இந்து முன்னனி பொறுப்பில் இல்லை என்றாலும் அது சரியாக தெரியவில்லை. கடந்த 40 வருடங்களாக இந்து அமைப்பினர் பழனியில் சம்பிரதாயப்படி, பாரம்பரியப்படி விநாயகர் ஊர்வலம் நடத்துகிறார்கள் என்றால் சரிதான். அவ்வாறு மேடை அமைத்தாக சொல்லியுள்ளதில் அந்த மேடையை அமைத்து கொடுத்த நபர் யார் என்றால் மேடை அமைத்திருந்தார்கள் அதை அமைத்து கொடுத்த நபர் யார் என்று தெரியவில்லை. அந்த மேடையை அமைத்து கொடுத்த தனி நபர் யாரென்று விசாரித்தேனா என்றால் இல்லை. அரசியல் உள்நோக்கத்தோடு உயர் அதிகாரிகள் தூண்டுதலோடு, காவல் துறையின் வேண்டுகோளுக்கிணங்க பொய்யாக புகார் கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

சரியல்ல. ஊர்வலத்திலும், பக்தர்கள் கூட்டமும் அதிகமாக இருக்கும் நிலையில் அங்கிருந்த நபரை பார்த்து அவர் தான் திருமலைச்சாமி என்று அடையாளம் கண்டிருக்க வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. ஒரு ஒரு விநாயகர் சிலை கூடவும் சுமார் 50 பேர் வந்திருப்பார்கள் என்றால் சரிதான்.

M PONPANDI
Digitally signed by M PONPANDI
Date: 2026.07.20 18:09:02 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.